முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1491

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.10.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞான வடிவே
ஓங்கார பிரணவக்குடில் படைத்த
ஓங்காரன் என்ஆசிபெற்ற அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள், 29.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் சக்தி பெருகிவர
அகிலத்தார் ஓங்காரக்குடில் நோக்கி வந்தால்
வாசியோகம் வெல்லும் வல்லமையும்
வறுமை போக்கி இந்த கலியினில் தனவான் ஞானவான் என்கின்ற மகாசக்தியும்
3. சக்திகூடி இனிதே சகலருக்கும் தர்மம் செய்யும் வல்லமை பெற்று
சற்குரு அரங்கன் தயவாலே
எல்லா காலங்களிலும் ஆரோக்கியம்பட
உலகோர்க்கு தொண்டாற்றும் ஈடுஇணையில்லாத அருள்பொருள் வளம்கூடி
4. கூடியே உலகோர் அரங்கன்வழி
குறையிலா ஞானிகள் ஆவர்
ஆகவே அரங்கன் தொடர்புகூட்டி
அறத்தோடு சன்மார்க்க நெறிபிறழா
5. பிறழாது ஞானவாழ்வு கொண்டுவர
பிசகின்றி உலகோர் ஞானவான்களாகி சிறப்பர்
சிறக்கவே ஞானிகளாகும் சிறப்பறிவும் கூடிஇனிதே
அறத்தோடு கூடிய அரங்கன் ஆசிபலத்தாலே அனைவரும் ஆறுமுகன் எனைகாணும் காட்சியும்

6. காட்சியோடு அழியாமை எனும் மகாசக்தியும்
கலியினில் அடைந்து ஞானிகளாக ஆற்றல் பெருகி இனிதே
அரங்கன் வழி கலியினில் எண்ணிலாகோடி ஞானியர் படைகளாக
இணைந்து இந்த உலகமாற்றம் புரிவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–